நகராட்சி அலுவலகம்,
புளியங்குடி,

நாள்.11.06.2024.

**மன்றக்கூட்ட அறிவிப்பு**

2024-ம் ஆண்டு ஜுன் மாதம் நாள்.12.06.2024, புதன்கிழமை காலை 10.30 மணியளவில் நகர்மன்றக் கூடத்தில் வைத்து நகர்மன்ற தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ள அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.

நகர்மன்ற தலைவர்,
புளியங்குடி நகராட்சி

**அவசரக் கூட்டம்**

| Date of Council | Decision No. | Subject in Agenda | Decision of Council |
|---|---|---|---|
| | 491 | **பொருள்.1**<br>புளியங்குடி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18, நடுக்கருப்பழகு தெருவில் பள்ளி கட்டிடம் 2023-24 ஆம் ஆண்டு SFC (School Improvement Grant) திட்டத்தின் கீழ் கட்டுவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை கடித ந.க.எண்.25741/2023/SS2, நாள்.26.10.2023-ன்படி மதிப்பீடு தொகை ரூ.45.90 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 24.11.2023-ல் இணையதளம் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, திரு.R.பால்ராஜ் ஒப்பந்ததாரருக்கு 12.01.2024 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டது.<br>அதன்படி மேற்படி இடத்தில் ஒப்பந்ததாரர் பணி துவங்க சென்ற போது திரு.பால்ராஜ் மற்றும் மூன்று நபர்கள் மேற்படி இடத்தில் ஆக்கிரமிப்பு செய்து அமைக்கப்பட்டுள்ள மூன்று குடியிருப்பு வீடுகளை அகற்றி பள்ளி கட்டிடம் கட்டுமாறும் அவ்வாறு பள்ளி கட்டிடம் கட்டும் போது அவ்விடத்தில் பொது மக்கள் வழிபடும் கோவிலை அகற்றாமல் கட்டுமாறும் நடுக்கருப்பழகு தெரு மக்கள் மனுவில் தெரிவித்து பள்ளி கட்டிடம் கட்டுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து வந்தனர். எனவே கடந்த 21.02.2024ல் வருவாய் துறை அலுவலர்களால் மேற்படி இடத்தினை நேராய்வு செய்யப்பட்டதில் மேற்படி பள்ளிக் கட்டிடம் கட்டும் இடத்திற்கு அருகில் 30 மீட்டர் தூரத்தில் சமுதாய கழிப்பிடம் அமைந்துள்ளது. மேலும் 60 மீட்டர் தூரத்தில் மயானக்கூடம் ஒன்று உள்ளது. இதனால் பள்ளிக்குழந்தைகளுக்கு இடையூறாகவும், சுகாதாரமற்ற நிலையில் உள்ளதாலும், மேற்படி பள்ளிக் கட்டிடம் கட்டுவதற்கு மாற்று இடம் தேர்வு செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண்.2449/2022/இ1)<br>**அலுவலக குறிப்பு** : மன்றம் முடிவு செய்யலாம். | அனுமதிக்கப்பட்டது |
| | 492 | **பொருள்.2**<br>புளியங்குடி நகராட்சி 22.05.1998 முதல் | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | இரண்டாம் நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி 55.166 ச.கி.மீ. பரப்பளவில் அமைந்து 33 வார்டுகளை கொண்டுள்ளது. இங்குள்ள மக்கள்தொகை 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 66034 ஆகும். இந்நகரில் 23985 குடியிருப்பு கட்டிடங்களும், 1200 வணிக கட்டிடங்களும், 76 தொழிற்சாலைகளும் உள்ளது. எனவே குடியிருப்பு, வணிகம் மற்றும் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் கழிவுநீரினை நகராட்சி மூலம் சுத்திகரிப்பு செய்வதற்கு ஏதுவாக 2 ஏக்கர் நிலப்பரப்பில் சுத்திகரிப்பு நிலையம் (Sewage Treatment Plant) அமைக்க வேண்டியுள்ளது.<br>மேற்கண்ட சுத்திகரிப்பு நிலையம் அமைக்க புளியங்குடி நகராட்சிக்குட்பட்ட சிந்தாமணி கிராமம், சர்வே எண்.991/1, வார்டு G, பிளாக் 12, நகரளவை எண்.5/1, 6 ஏக்கர் 79 செண்ட், சர்க்கார் புறம்போக்கு மயானம் என வகைப்பாடு கொண்ட இடம் கண்டறியப்பட்டு, சுத்திகரிப்பு நிலையம் (Sewage Treatment Plant) அமைக்க முன்நுழைவு அனுமதி வழங்கிட வேண்டி கருத்துரு இவ்வலுவலக கடித ந.க.எண்.132/2024/எப்1, நாள்.19.02.2024-ன்படி அனுப்பி வைக்கப்பட்டது. மேற்படி இடம் நீர்நிலைக்கு அருகாமையில் உள்ள தடை செய்யப்பட்ட பகுதி என்பதால், மாற்று இடம் தேர்வு செய்வதற்கு தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.<br>புளியங்குடி நகராட்சி, தி.நா.புதுக்குடி கிராமம், வார்டு K, பிளாக் 2, நகரளவை எண்.15/1, 15/2-ல் 40 KLD அளவில் கசடு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (FSTP) அமைக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. பொதுமக்களின் நலன் கருதி இந்நகர் பகுதிகளில் 96.86 கி.மீ. நீளத்திற்கு வாறுகால் வசதி செய்யப்பட்டுள்ளது. எனவே புளியங்குடி நகராட்சி பகுதியில் சுத்திகரிப்பு நிலையம் (Sewage Treatment Plant) அமைப்பது மிகவும் அவசியமாக உள்ளது. எனவே மாவட்ட ஆட்சியர் அறிவுரையின்படி வருவாய் வட்டாட்சியர், கடையநல்லூர் அவர்களுடன் கூட்டாய்வு செய்து, புளியங்குடி நகராட்சி, தி.நா.புதுக்குடி கிராமம், சர்வே எண்.25/1, வார்டு K, பிளாக் 09, பரப்பளவு 2.07 ஏக்கர் (83 ஏர்ஸ், 50 சதுர மீட்டர்), சர்க்கார் புறம்போக்கு பாதை என வகைப்பாடு கொண்ட இடம் கண்டறியப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட இடத்தில் சுத்திகரிப்பு நிலையம் (Sewage Treatment Plant) அமைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம். | |
| | 493 | **பொருள்.3**<br>புளியங்குடி நகராட்சி பழைய சர்வே எண்.351/2, வார்டு 8, பிளாக் 9, நகளரவை எண்.16/2 (2 ஏக்கர் 59 செண்ட்)-ல் அமைந்துள்ள இடம் நகரளவை ஆவணங்களில் "சர்க்கார்-புறம்போக்கு மயானம்" என பதிவாகியுள்ளது - மேற்படி இடத்தினை திருமதி.மம்மது மற்றும் திரு.இசக்கிராஜ் என்பவர்களால் ஆக்கிரமிப்பு செய்து உபயோகப்படுத்தப்பட்டு வந்தது. மேற்படி ஆக்கிரமிப்பினை தென்காசி வருவாய் கோட்டாட்சியர், கடையநல்லூர் வருவாய் வட்டாட்சியர் மற்றும் நகராட்சி ஆணையாளர் முன்னிலையில் காவல்துறை பாதுகாப்புடன் வருவாய் வட்டாட்சியர், கடையநல்லூர் அவர்களின் நிலஅளவை அலுவலர்கள் மூலம் கடந்த 08.01.2024-ல் அளவீடு செய்யப்பட்டு, 09.01.2024-ல் | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | மேற்படி இடத்தை சுற்றி வருவாய் துறையினரால் கம்பி வேலி அமைக்கப்பட்டது.<br>புளியங்குடி நகராட்சி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் மருத்துவ கல்லூரி, சட்டக்கல்லூரி, பொறியியல் கல்லூரி விவசாய கல்லூரி, கலை மற்றும் அறிவியல் கல்லூரி, செவிலியர் கல்லூரிகளும் புளியங்குடி நகர பகுதிகளில் நகராட்சி பள்ளிகள் 8 எண்ணமும், அரசு பள்ளிகள் 2 எண்ணமும், தனியார் பள்ளிகள் 43 எண்ணமும் செயல்பட்டு வருகிறது. மேலும் மேற்படி பள்ளிகளில் 7894 மாணவிகளும், 9381 மாணவர்களும் கல்வி பயின்று வருகின்றனர். இப்பகுதியில் கல்வி பயின்று முடித்த பின்பு போட்டித்தேர்வுகள் எழுதுவதற்கு தயாராகும் மாணவர்கள் வெளியூர்களில் அமைந்துள்ள பயிற்சி மையங்களுக்கு சென்று பயின்று வரும் சூழ்நிலை உள்ளது. மேற்படி பயிற்சி மையங்களுக்கு சென்று பயிலும் மாணவர்கள் தங்கி பயிற்சி பெற பயிற்சி கட்டணம் மிக அதிகமாக உள்ளது.<br>மேலும் மாணவர்கள் தங்களது சொந்த செலவில் அறிவுசார் விலை உயர்ந்த புத்தகங்களை வாங்கி படிக்க இயலாத நிலை உள்ளது. புளியங்குடி பகுதி விவசாய பகுதியாக இருப்பதால் கட்டணம் செலுத்த இயலாத பெற்றோர்கள் மாணவர்களை விவசாய பணிகள், ஜவுளிக்கடை, சிறுதொழில் நிறுவனங்களில் பணியில் அமர்த்துகின்றனர். மேலும் பெரும்பான்மையான மாணவர்களுக்கு அரசுப் பணிக்கு செல்வது இயலாத நிலை உள்ளது. எனவே புளியங்குடி நகராட்சி பகுதியில் அறிவுசார் மையம் அமைக்கப்பட்டால் மாணவர்கள் தங்களது பொது அறிவை வளர்த்துக் கொண்டு TNPSC, NEET, JEE, IIT, TET, Bank, Railway, Army மற்றும் Police ஆகிய அரசு தேர்வுகளில் வெற்றி பெறுவதற்கு பயனுள்ளதாக அமையும்.<br>எனவே புளியங்குடி நகராட்சி, சர்வே எண்.351/2, வார்டு 8, பிளாக் 9, நகளரவை எண்.16/2 (2 ஏக்கர் 59 சென்ட்)–ல் அமைந்துள்ள இடம் நகரளவை ஆவணங்களில் "சர்க்கார்–புறம்போக்கு மயானம்" என பதிவாகியுள்ள இடத்தில் நகராட்சி மூலம் அறிவுசார் மையம் அமைக்க புளியங்குடி நகராட்சிக்கு முன்நுழைவு அனுமதி வழங்கிட வேண்டி கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.. (ந.க.எண்.132/2024/இ1)<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். | |

நகர்மன்றத்தலைவர்,

புளியங்குடி நகராட்சி.